# கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா

https://www.carytamilschool.org


# செய்தியிதழ்

பங்குனி 2017

மலர் 2 இதழ் 2


## முதல்வரின் மனதிலிருந்து...

### திரு. செல்வன் பச்சமுத்து



தமிழ்ப்பள்ளியின் இக்கல்வியாண்டில் இரண்டாவது செய்தியிதழ் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறேன். செய்தியிதழின் மூலம் எமது பள்ளி பற்றிய செய்திகள் பல இடங்களைச் சென்று சேர்கிறது.

முதலாவது செய்தியிதழில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கிடைத்துள்ளது. பெற்றோருக்கும் ஆர்வம் ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் ஒத்துழைப்பும் கொடுக்கிறார்கள். எமது மாணவர்களின் பாதுகாப்பே எமது முக்கிய நோக்கம் என்றும் அதிலே நீங்களும் முக்கியமான பங்குதாரர் என்றும் மீண்டும் உறுதியாக கூற விரும்புகிறேன். பெற்றோரோ, மாணவரோ பாதுகாப்பு நடவடிக்கையில் ஏதேனும் குறைபாட்டைக் கண்டால் உடனே எமக்கு அதுபற்றி அறியத்தரவும். நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு நமது சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதோடு எமது தமிழ்மொழிக் கல்வியையும் ஆதரிப்பது என்பது மாணவரின் பாதுகாப்பிலேயே ஆரம்பிக்கிறது.

நாம் இதுவரை கல்வியாண்டை மிகவும் சிறப்பாக செய்துள்ளோம். மாணவர்கள் தொடர்ந்து தமது கல்வியை சிறப்பாக செய்து மீதமுள்ள கல்வியாண்டையும் முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது பருவத்தில் தமிழ்மழை நிகழ்வு மற்றும் பல போட்டிகள் நடத்தப்பட்டன. அவை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற மிகவும் சிரமப்பட்டு உழைத்த பொறுப்பாசிரியர்களுக்கு எமது பள்ளி நன்றி கூறுகிறது. இம் முறை நடந்த போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், அவர்களின் கட்டுரைகளும், பேச்சுகளும், திருக்குறள் ஒப்பித்தமையும் பிரமிக்க வைத்தன. வெற்றியாளர்கள் தமிழ்மழை மேடையில் தமது திறமையை வெளிக்காட்டி எமது பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். இதற்காக அவர்களின் பின்னின்று உழைத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் தமிழ்ப்பள்ளி நன்றி கூறுகிறது.

மேலும் தற்போது ஈலோன் பல்கலைக்கழகத்திலிருந்து, பட்டப்படிப்பு மாணவர்களும் பேராசிரியர் ஒருவரும் தமிழ் கற்க வருகிறார்கள். அவர்களின் தமிழ் கற்கும் ஆர்வமும் அவர்கள் கற்கும் வேகமும் எமது மனதுக்கு தெம்பூட்டுகின்றன. இதன் மூலம் வேறு இனத்தவர்களையும் தமிழ் மொழி சென்று சேரும் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

*தொடர்ச்சி பக்கம் 2 இல் ………*

## *இதழாசிரியரின் இதயத்திலிருந்து ...*
## *கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்*

எமது இக்கல்வியாண்டின் முதலாவது செய்தியிதழ் தை மாதம் 15 ஆம் நாள் வெளிவந்தது. அது மிகவும் சிறப்பாக வெளிவர உழைத்த அனைவருக்கும் நன்றிகள். செய்தியிதழைப்பற்றி எங்களுக்கு பலவித பின்னூட்டல்கள் கிடைத்தன. அவற்றின் அடிப்படையில் இவ்விரண்டாவது இதழை சிறப்பாக தயாரித்து வெளியிடுகிறோம்.

இச்செய்தியிதழை மாணவர்கள் வாசிக்கும்படி ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் எங்களது கடின உழைப்புக்கான சரியான பலன் கிடைக்கும். எனவே ஆசிரியர்களே, வகுப்பில் இதனை ஒரு நாள் வாசிக்கும்படி ஊக்கப்படுத்தி, அதில் சில வினாக்களை வீட்டுப்பாடங்களிலும் கொடுக்கவும். இதனால் மாணவர்களுக்கு பள்ளியிலும், அதன் மூலம் தமிழ் மொழியிலும் ஆர்வம் வரும் என்பது எங்களது நம்பிக்கை.

இவ்விதழில் முதல்வரின் செய்தியுடன், வகுப்புச் செய்திகள், பள்ளியில் நடைபெற்ற போட்டி முடிவுகள் மற்றும் தமிழ்மழை நிகழ்வுகள் பற்றிய செய்திகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிகழ்வுகளின் புகைப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இச் செய்தியிதழ் சம்பந்தமான தங்கள் கருத்துக்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் ஆதரவுக்கு நன்றி கூறுவதோடு, தொடர்ந்து ஆதரவு நல்க வேண்டுகிறோம். ♠

**தொடர்பு மின்னஞ்சல்: nsivayogan@gmail.com**

*****

## *செய்தியிதழ்க் குழு 2016 -2017*

***முனைவர். காசி அழகானந்தம்***
***திரு. தி. வெ. ராமசுப்ரமணியன்***
***திரு. செல்வன் பச்சமுத்து***
***திருமதி. இரம்யா வரதராஜன்***
***முனைவர். இளங்கோவன் கோபால்***
***திருமதி. சர்மிளா குமார்***
***திருமதி. விஜயலட்சுமி செல்வக்குமார்***
***திரு. அசோக் நாகராஜன்***

*****

## *முதல்வரின் மனதிலிருந்து..... தொடர்ச்சி*

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் ஒழுங்காக கற்கவும் வீட்டுப்பாடங்களை செய்யவும் உகந்த வழிகளைச் செய்து உதவுங்கள். நாளாந்த வாழ்க்கையில் தமிழ்மொழிக் கற்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுங்கள். உங்கள் பிள்ளை தமிழை கல்வி சார்ந்தும் சமூகமாகவும் கற்க உதவுவதன் மூலம் உங்களின் பள்ளியினுடான உறவையும் காட்டுங்கள். எங்கள் ஆசிரியர்கள் உங்கள் பிள்ளையின் தமிழ்க்கல்வியில் பெரு மாற்றத்தை உண்டுபண்ண தொடர்ந்து பாடுபட ஆயத்தமாக உள்ளனர்.

எமது பள்ளியின் செயற்பாடுகள் சம்பந்தமான உங்கள் கருத்துக்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள் அப்போதுதான் பள்ளி சீராக வளரும். ♠

**தொடர்பு மின்னஞ்சல்: cts.principal@yahoo.com**

*****

## மழலை வகுப்பு செய்திகள்

எமது வகுப்பின் இரண்டாம் பருவத்தில் குழந்தைகளுக்கு எளிமையான எழுத்துக் களான "ப், ப, ம், ம, ட், ட" என்பவற்றை பயிற்சித்தாள்கள் மூலமாக கற்பித்தோம். பின்பு அதை வைத்து "படம், பட்டம்" என்று இரண்டு சொற்களை கற்பித்தோம். குழந்தைகளுக்கு பிடித்தமான "இரயில் வண்டி", "குரங்கு" போன்ற பாடல்களை சிறு விளையாட்டுப் பொருட்களைக் காண்பித்து பாடினோம். குழந்தைகளின் ஆர்வத்தை அதிகரிக்க பாசியையும், கம்பிகளையும் ஒவ்வொன்றாக அடுக்கி 1 முதல் 20 வரையிலான எண்களை கற்றுக் கொடுத்தோம். வண்ணம் தீட்டும் பயிற்சிகளை வீட்டுப்பாடமாக கொடுத்தோம். குழந்தைகள் மிக ஆர்வமாக அதை செய்து முடித்தார்கள். ♠

*****

## வகுப்பு 1 செய்திகள்

இரண்டாம் பருவத்தில் மாணவர்களுக்கு 18 மெய் எழுத்துக்களை அடையாளம் காணவும், சரியான வரிசையில் எழுதவும் கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வாரமும் மூன்று புதிய எழுத்துக்களை சொல்லிக்கொடுத்து அவற்றை எழுத வீட்டுப்பாடம் கொடுக்கப்பட்டது. முதல் பருவத்தில் கற்பிக்கப்பட்ட உயிர்மெய் எழுத்துக்களில் கூடுதல் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் நாங்கள் பேச்சுத்தமிழுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றோம். மெய் எழுத்துக்கள், வாகனங்களின் பெயர்கள், காய்கறிகள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள், வண்ணங்கள் மற்றும் அவற்றின் வடிவங்கள் கொண்ட படங்களை புத்தகத்திலிருந்து சுட்டிக்காட்டி, குழந்தைகள் அவற்றைப் பல முறை திரும்பத் திரும்பக் கூறப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களின் சிந்தனையை ஊக்குவிக்க, மாணவர்கள் தங்களுக்கு பிடித்த தலைப்பில் ஐந்து சொற்றொடர்கள் தயார் செய்து பேச ஊக்குவிக்கப்பட்டது. எங்கள் நோக்கம் பேச்சு தமிழில் அவர்கள் நன்றாக உரையாடுதல் மற்றும் அவர்களை அடுத்த நிலைக்கு வளரச்செய்தல் ஆகும். மாணவர்கள் இரண்டு பாடல்களை கற்றுக் கொண்டார்கள். வகுப்பில், கேள்விகளை கேட்டு தமிழில் அன்றாட நிகழ்வுகளைப் பேச மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் வகுப்பில் நன்றாகப் பேசி கலந்துரையாடுகிறார்கள். ♠

*****

## வகுப்பு 1 அ செய்திகள்

இரண்டாம் பருவத்தில் மாணவர்களுக்கு உயிர்மெய் எழுத்துக்கள் எழுத மற்றும் படிக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டது. அந்த வரிசையில் "ட, டா, ப, பா, ம, மா, ச, சா, க, கா, த, தா, ன, னா, ண, ணா, ர, ரா, ங, ஙா ந, நா, ற, றா, (ட்+ அ = ட)" ஆகியவை கற்பிக்கப்பட்டன. அவற்றுடன் குறில் நெடில் ஒலிகள் பயிற்றுவிக்கப்பட்டன. தமிழிலுள்ள சிறுவர் பாடல்கள் நான்கும் கற்றுக்கொண்டார்கள். இதுவரை 50 சொற்கள் எழுத மற்றும் படிக்கவும் கற்றுக்கொண்டதோடு இரண்டு அல்லது மூன்று சொற்கள் கொண்ட 22 சொற்றொடர்களை படிக்கவும் கற்றுக் கொண்டனர். ♠

*****

## வகுப்பு 1 ஆ செய்திகள்

1 ஆ வகுப்பு மாணவர்களுக்கு இரண்டாம் பருவத்தில் பாடநூல் மற்றும் பயிற்சிநூலிருந்து பாடம் ஆறிலிருந்து பத்து வரை கற்பிக்கப்பட்டது.

தமிழ் எழுத்துக்களில், "ஐ" வரிசை வரை உயிர்மெய் எழுத்துக்கள் பயிற்றுவிக்கப் பட்டது. முதல் பருவத்தைப் போலவே இரண்டாம் பருவத்திலும் மாணவர்கள் இந்த உயிர்மெய் எழுத்துக்களை நன்றாக அறிதல், ஒவ்வொரு பாடத்திலும் இந்த எழுத்துக்களால் ஆன சொற்களைத் தெளிவாக உச்சரித்தல், மற்றும் அச்சொற்களால் உருவான சிறு சிறு சொற்றொடர்களை வாசித்தல் ஆகியவற்றுக்கும், அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இலக்கணத்தில் ஒருமை - பன்மையில் புதிய சொற்களைக் கொண்டு எவ்வாறு அதைப் பன்மையாக மாற்றுவது என்பதை கற்பித்துள்ளோம். மேலும் இரண்டாம் பருவத்தில் புதிய இரண்டு திருக்குறள்களை பொருளுடன் கற்றுக்கொடுத்துள்ளோம்.

இவை அனைத்தும் குழந்தைகளுக்கு எளிய முறையில் கதை, பாடல் மற்றும் சில சுவையான முறைகள் கொண்டு எங்கள் 1 ஆ ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். ♠

*****

## வகுப்பு 2 அ செய்திகள்

இந்த இரண்டாம் பருவத்தில், 2 அ மாணவர்களுக்கு காய்கறிகள், விலங்குகள், குடும்ப உறவுகள், மற்றும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு பொருட்கள் பற்றிய சொற்களைக் கற்பித்துள்ளோம்.

மாணவர்கள் தமிழ் வகுப்புக்கு வந்து தமிழ் கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர்கள் அவர்களுக்கு சொல் விளையாட்டு, வினாடி வினா போன்ற வேடிக்கை முறைகளையும் கையாள்கிறார்கள்.

மாணவர்கள் தமிழில் மட்டுமே பேசவேண்டும் என்பதை ஆசிரியர்கள் எப்பொழுதும் ஊக்குவிக்கின்றனர். மாணவர்கள் சொற்கள் தெரியாமல் தடுமாறும் பொழுது ஆசிரியர்கள் உதவி செய்து அவர்களுக்குத் தன்னம்பிகையை அளிக்கின்றனர்.

வரிசையான படங்களைப் பார்த்து சொந்த சொற்றொடர்களில் தமிழில் கதை சொல்லும் முறை பயிற்றுவிக்கப்பட்டது. மாணவர்களுக்கான ஒரு உற்சாகமான பயிற்சி சூழலை உருவாக்குவதற்கு ஆசிரியர்கள் அனைத்து முயற்சிகளையும் கையாள்கிறார்கள். ♠

*****

## வகுப்பு 2 ஆ செய்திகள்

இந்த இரண்டாம் பருவத்தில் எமது 2 ஆ வகுப்பில் நாங்கள் திசைகள், நவமணிகள், அறுசுவைகள், எண்கள் (1-10) ஆகியவற்றை மாணவர்களுக்கு கற்பித்தோம். மேலும் மாணவர்கள் பிழை இல்லாமல் சொற்றொடர் ஒன்றை எழுதுவதற்கு உதவும் வகையில், இலக்கணத்தில் நிலை மற்றும் காலங்கள் குறித்து படித்துப் புரிந்து கொண்டார்கள். நவம்பர் மாதம் நடைபெற்ற

தமிழ்த்தின போட்டிகளில் எங்கள் வகுப்பு மாணவர்கள் கலந்து கொண்டு சிலர் பரிசுகளும் வென்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம். "பாரதியார் பாடல்கள்" தலைப்பில் தமிழ்மழை நிகழ்ச்சியில் பங்குபெற்று தங்களது திறமைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தினார்கள். அடுத்து பாடநூல் (6-10) மற்றும் பயிற்சிநூலில் உள்ள பகுதிகளையும் சொல்லிக் கொடுத்தோம். "பண்புள்ள குடிமக்கள்" புத்தகத்தில் உள்ள சில கதைகளைப் படித்துப் புரிந்து கொண்டு தங்கள் தமிழ் படிக்கும் மற்றும் பேசும் திறனையும் மாணவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். வீட்டுப்பாடம் தயார் செய்தல், வினாடிவினா மற்றும் தமிழ்மழை பயிற்சி என அனைத்து ஆசிரியர்களும் தங்களுக்கான பணிகளை செவ்வனே செய்து முடித்தார்கள். ♠

*****

## வகுப்பு 3 அ செய்திகள்

இரண்டாம் பருவ ஆரம்பத்தில் மூன்று வாரங்கள் வகுப்பிலேயே தமிழ்மழை நிகழ்வுக்கு பயிற்சி கொடுத்தோம். பின்னர் பாடப்புத்தகத்தில் பக்கம் 31 முதல் 49 வரையும் பயிற்சிப் புத்தகத்தில் பக்கம் 31 முதல் 45 வரையும் கற்பித்தோம். அத்துடன் பண்புள்ள குடிமக்கள் புத்தகத்தில் இருந்தும் இரண்டு கதைகள் கற்பித்தோம். மேலதிகமாக இலக்கணத்தில் ல, ழ, ள வேறுபாட்டில் ஒரு தொகுதி சொற்களும், தமிழில் முதலில், இறுதியில் வரக்கூடிய உயிர் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், ஒருமை - பன்மை, ஆண்பால் - பெண்பால் சொற்கள் ஆகியவை பற்றியும் அவற்றிற்கான விதிகள், மற்றும் விலங்குகளின் பிள்ளைகளை அழைக்கும் முறையும் கற்பிக்கப்பட்டன. இவற்றிற்கான கையேடுகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இருபொருட்களை ஒப்பிட்டு எழுதுவதும், தர்க்கரீதியாக கதைகளை ஒழுங்கு செய்வதும் கற்பித்தோம். கட்டுரைகளில்; மாணவர்கள் கண்டு பயந்த நிகழ்வு, பெரியவர்கள் சொல்லியும் கேட்காது செய்து துன்பப்பட்ட நிகழ்வு, பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கம், நண்பர்களுடன் நெருக்கமாக பேசும் விடயம் போன்றவை எழுதப் பயிற்சி அளிக்கப்பட்டன. நான்கு திருக்குறள்களும், அவற்றின் பொருளும், குறள்களுக்குப் பொருத்தமான கதைகளும் கற்பிக்கப்பட்டன. ♠

*****

## வகுப்பு 3 ஆ செய்திகள்

3 ஆ வகுப்பில் இரண்டாம் பருவத்திற்கான பாடத்திட்டத்தைச் சொல்லிக்கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு ஆறிற்கு மேற்பட்ட சொற்கள் கொண்ட சொற்றொடர்கள் எழுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. பல மாணவர்கள் இந்த பயிற்சியில் சிறந்த முன்னேற்றம் காட்டிவருகிறார்கள்.

பாடங்கள் சார்ந்த இலக்கணங்களை பயிற்றுவிப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். குறில் மற்றும் நெடில் எழுத்துக்களை சரியாக பயன்படுத்துவதற்கும் பயிற்சி அளித்து வருகிறோம். இத்துடன் நாங்கள் தமிழில் வாசித்தல், புரிந்துகொள்ளுதல் மற்றும் உரையாடுதலில் கூடுதல் பயிற்சி தேவைப்படும் மாணவர்களை

தேர்ந்தெடுத்து, ஆசிரியர் ஒருவரை அவர்களுக்கு தனியாக பயிற்சி அளிக்க அமர்த்தி சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறோம்.

வகுப்பில் "சொல் விளையாட்டு, சைகை விளையாட்டு" போன்றவற்றின் மூலமாக மாணவர்கள் தமிழ் கற்பதை மகிழ்ச்சியான முறையில் ஊக்குவிக்கின்றோம். இதனால் மாணவர்கள் வகுப்பிற்கு மகிழ்ச்சியாக தமிழ் கற்க வருகிறார்கள். நாங்கள் அனுப்பிய மாதிரி வினாத்தாள், வீட்டுப்பாடங்கள் போன்றவற்றை கவனமாக படித்து இரண்டாம் பருவத் தேர்வில் மாணவர்கள் நன்றாக தேறியுள்ளார்கள். ♠

*****

## வகுப்பு 4 அ செய்திகள்

4 அ வகுப்பு மாணவர்கள் தங்கள் பேச்சிலும் எழுத்திலும் சொற்றொடர்களை சரிவர அமைக்கக் கற்றுக்கொண்டு அவற்றில் மேம்பட கடின பயிற்சியும் செய்தனர். தாம் சொல்ல வரும் கருத்தை மனதில் கொண்டு, அதற்கு தகுந்த வேற்றுமை உருபை பயன்படுத்தக் கற்றுக்கொண்டனர். வேற்றுமை உருபின் இலக்கணத்தைப் படிக்காவிடினும் அதன் பயன்பாட்டை மாணவர்கள் அதிவிரைவாகக் கற்றுக்கொண்டனர். அவர்கள் எழுத்துப் பிழையின்றி எழுதுவதில் கொண்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைகிறோம். வரும் நாட்களில் மாணவர்கள் சரளமாக தங்கு தடையின்றி வாசிக்கப் பயிற்சி தரப்படும். அவர்கள் வீட்டிலும் சரளமாக பேசவும், படிக்கவும் உதவும்படி பெற்றோரை கேட்டுக் கொள்கிறோம். ♠

*****

## வகுப்பு 4 ஆ செய்திகள்

4 ஆ வகுப்பில் பாடநூல் திட்டத்தில் உள்ள பாடங்கள், சொற்கள், இலக்கணம் மற்றும் இலக்கியங்கள் முறையாக பயிற்றுவிக்கப்படுகிறது. இந்த காலாண்டில், மாணவர்களுக்கு இலக்கணத்தில் "பற்றி", "போல" ஆகியவற்றை உபயோகித்து சொற்றொடர்கள் எழுதவும், ஒரு ஒலி இரு பொருள்கள் தரும் சொற்கள் பற்றியும் படித்தோம். மேலும், ஒரே பொருளுள்ள பல சொற்களை பற்றியும் படித்தோம். கடிதம் எழுதுதல் பற்றியும் பல்வேறு கடிதங்களின் வகைகளை பற்றியும் படித்தோம். இதற்கும் மேலாக, பிரித்து எழுதுதல் சேர்த்து எழுதுதலில் எப்படி இரு சொற்களை பிரித்து மற்றும் சேர்த்து எழுதலாம் என்பதைப் படித்தோம். பிழையில்லாமல் எழுதுவதற்கான பயிற்சிகளும் வழிமுறைகளும் பயிற்றுவிக்கப்படுவதுடன், பல்வேறுவகையான கதைகள், கட்டுரைகள் மற்றும் கடிதங்கள் எழுதும் முறைகளும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, வாரம் ஒரு திருக்குறள் என்ற முறையில் சில திருக்குறள்களையும் பயின்றார்கள். இவற்றுடன் பண்புள்ள குடிமக்கள் என்ற புத்தகத்தின் மூலம் ஒரு நல்ல குடி மகன் எப்படி வாழ்வது என்ற வாழ்வியல் முறைகள் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு பலவழிகளில் எமது மாணவர்கள் தமிழ் கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு முறைகளை முறையாக பயில்கிறார்கள். ♠

*****

## வகுப்பு 5 அ செய்திகள்

இரண்டாம் பருவத்தில், 5 அ மாணவர்களுக்கு, ஒரே பெயர்ச்சொல் உடைய இரண்டு சொற்றொடர்களை இணைத்து எழுதக் கற்றுத் தரப்பட்டது. "ஓர்", "ஒரு" என்ற சொற்களை உயிர், மெய் எழுத்துக்களின் முன் பயன்படுத்தச் சொல்லித் தரப்பட்டது. "ரகர", "றகர" "ஒலி வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரித்து தெளிவாகவும், சரளமாகவும் வாசிக்கப் பயிற்றுவிக்கப்பட்டது.

பாடப் பகுதியில் “உலக அதிசயங்கள்”, "பிரமிடுகள்", மற்றும் "அங்கோர்வாட்" பற்றிய தகவல்களை அறிந்து கொண்டார்கள். மேலும் இரண்டு திருக்குறள்களும், மூன்று பழமொழிகளும் எளிமையான விளக்கத்துடன் நன்கு புரியும் வகையில் கற்பிக்கப்பட்டது. மகாகவி பாரதியின் "வேற்றுமையில் ஒற்றுமை" பாடலின் மூலம் மனிதர்கள் தோற்றத்தால் வேறுபட்டிருந்தாலும், எல்லோரும் ஒன்றுதான் என்றும், இன நல்லிணக்கத்தின் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது. ♠

*****

## வகுப்பு 5 ஆ செய்திகள்

5 ஆ வகுப்பில் பாடப்புத்தகத்திலிருந்து 8 பாடங்கள் வரையில் படித்திருக்கிறோம். பயிற்சி நூலில் 9, 10 தொகுதிகளை முடித்துள்ளோம். ஒலி வேறுபாட்டுச் சொற்களின் (ர, ற, ல, ள, ழ, ன, ண) உச்சரிப்பில் உள்ள வேற்றுமையையும், பயன்பாட்டையும் சொற்றொடர்களில் உபயோகப்படுத்தி அறிந்து கொண்டோம். ”ஆகிய”, ”முதலிய” சொற்களை சொற்றொடர்களில் பயன்படுத்தக் கற்றுக் கொண்டோம். கதைப்புத்தகத்தைப் படித்து உடனே கேள்விகள் கேட்டு பதிலளித்தார்கள். திருக்குறளிலிருந்து செவிச்செல்வத்தின் பெருமையையும், சினத்தை அடக்குவதின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டோம். இதைப்போன்ற வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைப் பற்றி உரையாடுவோம். ♠

*****

## வகுப்பு 6 அ செய்திகள்

வகுப்பு 6 அ இல் இரண்டாம் பருவத்தில் வெளிநாட்டுப் பயணங்களின் மூலமாக கிடைக்கும் வித்தியாசமான அனுபவங்களையும், தமிழ் மொழியின் சிறப்புகளையும் பாடநூல் வழியாக மாணவர்கள் கற்றுக்கொண்டார்கள். இதன் மூலமாக புதிய சொற்களைப் பாடநூலிலிருந்து கற்றுக்கொண்டார்கள். இலக்கணங்களில், வேற்றுமை உருபுகளிலும், ஒலி வேறுபாடுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டன. பாடநூலிலிருந்து பழமொழிகளும், திருக்குறளும் கற்பிக்கப்பட்டன. ♠

*****

## வகுப்பு 6 ஆ செய்திகள்

தவிர்க்க முடியாத காரணத்தால் வகுப்பு 6 ஆ செய்திகள் இம் மலரில் இடம் பெறவில்லை. ♠

*****

# தமிழ்மழை நிகழ்வுகள் 12.17.2016























கேரி தமிழ்ப்பள்ளி
Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization


Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization


கேரி தமிழ்ப்பள்ளி
Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization





























***ஈலோன் பல்கலைக்கழக பேராசிரியர் மத்தியூ H. ஜென்டில் மற்றும் அவரின் மாணவர்களும் கேரி தமிழ்ப்பள்ளியில் தமிழ் கற்கையில்***



## தமிழ்த்தினப் போட்டிகளின் வெற்றியாளர்கள்

| பாட்டு | Songs | பங்குபற்றியோர்: 47 |
|---|---|---|
| மழலை வகுப்பு | வகுப்பு 1 | வகுப்பு 1A |
| 1st: ரக்ஷனா பாலமுருகன்<br>ருத்விகா சுப்ரமணியன்<br>நந்திதா அனந்தராமன்<br>2nd: மிதுன் சஞ்சய் கார்த்திக் ராஜா<br>3rd: பூர்வஜா சரவணன் | 1st: லக்ஷனா ஸ்ரீஹரி<br>2nd: பிரணவ் சந்திரமௌலி<br>3rd: ஸ்ருதி குமரவேல் | 1st: ஷிவானி ஐயர்<br>2nd: பிரஜ்னா விமல்<br>3rd: ஷ்ரியா பிரகாஷ் |
| மாறுவேடம் | Fancy Dress | பங்குபற்றியோர்:56 |
| மழலை வகுப்பு | வகுப்பு 1 | வகுப்பு 1B |
| 1st: ருத்விகா சுப்ரமணியன்<br>2nd: சார்வின் கௌதமன்<br>3rd: சமித்ரா சங்கர் | 1st: ஸ்ரீநிதி ஜெயக்குமார்<br>2nd : சர்வேஷ் திலீப்குமார்<br>3rd :அதிரிஷ் சிதம்பரநாத் | 1st: கண்மணி மதன்ராஜ்<br>2nd: மான்சி சுதாகரன்<br>3rd: இனியா ரத்தினகுமார்<br>ஸ்ரீதீக்க்ஷிதா சுரேஷ்குமார் |
| | வகுப்பு 1A | வகுப்பு 2A |
| | 1st: ஷிவானி ஐயர்<br>2nd: ஹரிஷ் பாபு<br>3rd: மஹிழினி கரிகாலன்<br>3rd: ஸ்ரீபாலா அருணாசலம் | 1st: ஸ்ரீநாத் ஜெயராமன்<br>2nd: பத்ரேஷ்அமர்நாத் |
| ஓவியம் | Drawing | பங்குபற்றியோர்:133 |
| வகுப்பு 1 | வகுப்பு 1A | வகுப்பு 1B |
| 1st: ஸ்ருதி குமரவேல்<br>2nd: பூர்வா விஸ்வநாத்<br>3rd: லக்க்ஷனா ஸ்ரீஹரி | 1st: ஹரிணி நாச்சியப்பன்<br>2nd: டானியா ஹலீல்<br>3rd: மஹிழினி கரிகாலன் | 1st: அனன்யா பாபுராஜ்<br>2nd: ஜெனிக்கா இனிகோ<br>3rd: T .சுசித்ரா |
| வகுப்பு 1A/1B இடைநிலை | வகுப்பு 2A | |
| 1st: ராகுல் வெங்கடேசன்<br>2nd: ஆதித்யா குமரன்<br>3rd: ஆனிக் ஹலீல் | 1st: சஞ்சுஸ்ரீ நிரஞ்சன்குமார்<br>2nd: நியந்த்ரி தியாகராஜன்<br>3rd: ஹர்ஷினி தண்டபாணி | |
| தமிழ் தேனீ | Spelling Bee | பங்குபற்றியோர்:33 |
| வகுப்பு 1B | வகுப்பு 2A | |
| 1st: சோனிகா சங்கர்<br>2nd: அனன்யா பாபுராஜ்<br>3rd: சுகிதா விஜயகுமார்<br>புவன் சந்திரன்<br>T .சுசித்ரா | 1st: ஷ்ரேயாஸ் வல்லபன்<br>2nd: தான்யா விஜயகுமார்<br>3rd: யாழினி இளங்கோவன் | |

| பேச்சு | Oratorical | பங்குபற்றியோர்:30 |
|---|---|---|
| வகுப்பு 2B, 3B | வகுப்பு 3A | வகுப்பு 4B, 5B |
| 1st: விஷால் ராமசுப்பிரமணியன்<br>2nd: ரிதன்யா நாகராஜா<br>வகுப்பு 3B<br>1st: மதுமிதா கோபிநாத்<br>2nd: அமிழ்தன் இளங்கோவன்<br>3rd: ரதிஶ்ரீ சீனிவாசன் | 1st: சஹானா சுரேஷ்<br>2nd: ஆர்ணி பங்குராஜ்<br>3rd: பூர்வஜா சந்திரமௌலி | 1st: கிருத்திகா வேலப்பன் (4B)<br>2nd: ஜோ டானிகா இனிகோ (4B)<br>3rd: அஷ்வின் சிவயோகன் (5B) |
| திருக்குறள் | Thirukkural | பங்குபற்றியோர்:23 |
| வகுப்பு 2B | வகுப்பு 3A | |
| 1st: ஷ்ருதி சுரேஷ்<br>2nd: ஸ்ருதிகா ரவிசங்கர் (2B) | 1st: தன்யா பாலசுப்ரமணியன்<br>2nd: ஸ்ருதி கண்ணன்<br>3rd: சஹானா சுரேஷ் (3A) | |
| வகுப்பு 3B | வகுப்பு 4A, 4B, 5A | |
| 1st: அமிழ்தன் இளங்கோவன்<br>2nd: ரதிஶ்ரீ சீனிவாசன் | 1st: அர்ச்சனா அண்ணாதுரை (5A)<br>2nd: சிந்து சண்முகம் (4B)<br>3rd: ஷிவாலி ராஜேந்திரன் (4A) | |
| கட்டுரை | Essay | பங்குபற்றியோர்:17 |
| வகுப்பு 2B | வகுப்பு 3A | |
| 1st: ஹேமந்த் சுதாகரன்<br>2nd: சஹானா செல்வகுமார்<br>3rd: ஸ்ருதிகா ரவிசங்கர் | 1st: தன்யா பாலசுப்ரமணியன்<br>2nd: பூர்வஜா சந்திரமௌலி<br>3rd: அம்ரிதா செல்வராஜ் | |
| வகுப்பு 3B | வகுப்பு 4A, 5B, 6A | |
| 1st: மதுமிதா கோபிநாத்<br>2nd: கேஷவ் வரதராஜன்<br>3rd: அனிஷா சிவயோகன் | 1st: அபர்ணா தர்மர் (6A)<br>2nd: அஷ்வின் சிவயோகன் (5B)<br>3rd: ஷிவாலி ராஜேந்திரன் (4A) | எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றியோர்: 339 |

***முக்கிய நிகழ்வுகள்***

***இரண்டாம் பருவப் பரீட்சை***
***02.26.2017***
***பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு***
***03.05.2017***
***ஆசிரியர் கூட்டம்***
***03.12.2017***
***பள்ளியின் புகைப்படம் எடுக்கும் நாள்***
***03.19.2017***
***ஆசிரியர்களுக்கான பாராட்டு விருந்து***
***03.25.2017***
***ஆண்டுமலர் கட்டுரை சமர்ப்பித்தல்***
***03.26.2017***
***ஆசிரியர் கூட்டம்***
***05.21.2017***
***இறுதிப் பரீட்சை***
***06.04.2017***
***பரிசளிப்பு தினம்***
***06.11.2017***

~~~★~~★~~★~~~

# கேரி தமிழ்ப்பள்ளி

## வடகேரொலைனா, அமெரிக்கா

https://www.carytamilschool.org

© கேரி தமிழ்ப்பள்ளி, 2016 -2017

~~~★~~★~~★~~~